தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 260/மா/2022

நாள்: 19.01.2023

டாக்டர். திருமதி.நளினி தாம்ஸன், – முறையீட்டு மனுதாரர்
தூத்துக்குடி

ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி, – எதிர்மனுதாரர்
தூத்துக்குடி

தூத்துக்குடி, V.E. ரோடு, கதவு எண்.181ல் வசிக்கும் டாக்டர். திருமதி. நளினி தாம்ஸன் என்பவரின் 07.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.12.2022–ல் பெறப்பட்டு 260/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி, V.E. ரோடு, கதவு எண்.181ல் வசிக்கும் டாக்டர். திருமதி. நளினி தாம்ஸன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 07.12.2022 நாளிட்ட தனது மனுவில் :

" I am Dr. Nalini Thompson. I graduated from AIMS New Delhi and I wanted to use my education and qualification for the local public that I joined the Municipal Service as Medical Officer and I am now before you seeking justice. I was contributing a portion of my salary towards P.F. I understand that the High Court had directed the Corporations and Municipalities to pay interest to their employees on PF deducted from the employees. Many influential staff have collected the interest due to them. I submitted an application to the Director of Local Fund on 17.10.2020. The A.D. of Local Fund by his letter dated 17.10.2020 informed me the necessary sanction has been accorded by them and directed me to approach the Tuticorin Municipal Corporation Commissioner. On the same day he also addressed a letter to the Commissioner of the Corporation and directed the commissioner to take immediate and prompt action for payment of interest due to me and marked a copy to me. But there was no resonse, Finally I resorted to the RTI Act and sought for copy of the file and I was informed that there is a running file. But they refused to give me a copy of the file contain information regarding other similar applicants also. They had also informed me " தங்கள் விண்ணப்பம் இணைக்கப்பட்டு வட்டி கணக்கிடும்

பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது" . Now it is more than 19 months since I received the said reply but I have not received the payment and hence I am coming before you. I am now running 75 years and I request you to pass appropriate orders and directions to enable me to get the relief as early as possible" என தெரிவித்துள்ளார்.

**2.** இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை **03.01.2023** அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி **21.12.2022** நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**3)** மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது **23.12.2022** நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

" In continuation of my special request contained in page 2 of my complaint which is reproduced here below:

"Special Request by a Senior Citizen" "If orders can be passed on the material place before you, without summoning me to appear before you, that may be ideal, because of my age and consequent restrictions. However if you want to hear me in person, I may be heard at Tuticorin when you camp at Tuticorin."

ii) In continuation I once again request your special favour as above.

If you will please condone my absence and exempt me from personal appearance, since my case is too simple, I may be permitted to submit the following as absentee complainant:-

iii) My complaint pertains to the fact that I have not been paid the interest payable on my PF contribution, (due to me) which I understand from Encl. No.1 is payable by the respondent Corporation.

iv) However unaware of, as to who should pay the amount, I address a letter dated 17.10.2020 (Encl. No.1 ) to the Director of LF Audit, Chennai.

v) The LF Audit Chennai by reply dated 17.12.2020(Encl. No.2) informed me as follows:

"சேமநல நிதி வட்டி தொகை 2011–ம் ஆண்டிலேயே இவ்வலுவலகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது"

vi) The A.D.L.F. also directed the Commissioner, Tuticorin Municipality by their letter dated 17.12.2020 (Encl. No.3) as follows:

"2005ல் பணி ஓய்வு பெற்றுள்ள மனுதாரருக்கு நாளதுவரை வட்டித்தொகை வழங்கப்படாதது முரணாக கருதப்படுகிறது. மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேமநலநிதி வட்டி தொகை கணக்கீடு செய்து விரைவில் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது" .

(I have produced copy of the said letter marked to me as Encl. No.3)

vii) Since there was no response from the respondent, for nearly 5 months, I sought for information under RTI Act and the respondent corporation gave the following information on 06.05.2021 (wide Encl.No.4) – as follows:

“சேமநலநிதி வட்டி கோரி ஓய்வூதியதாரர்களின் விண்ணப்பத்துடன், தங்களின் விண்ணப்பமும் இணைக்கப்பட்டு வட்டிக் கணக்கிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோப்பில் மூன்றாம் நபர் தொடர்புடைய தகவலும் அடங்கியிருந்ததால் தகவல் அறியும் உரிமைச்சட்டம் **2005** விதியின் கீழ், கோப்பின் நகலை வழங்க இயலாது”

viii) From the above information furnished on 06/05/2021 we have to gather that a file has been opened, and that they have started calculating the interest due to the petitioner and other similar petitioners even before 06.05.2021.

ix) I am sure the Hon’ble Ombudsman will agree with me that till December 2022 nearly 19 months have lapsed, and the calculation if not completed till now, this is a fit case for the Hon’ble Ombudsman to pass appropriate directives to the respondent.

x) Pray therefore that:-

a) The personal appearance of the Petitioner/Complainant before the Hon’ble Ombudsman pursuant to the summons dated 22.12.2022 may be dispensed.

b) The absence of the petitioner, on account of her age and infirmities before the Hon’ble Ombudsman may be condoned.

c) Based on the written above may appropriate orders may be passed directing the respondent Commissioner to pay the interest due to the petitioner on her PF contribution without any further delay and also direct payment of interest upon the interest amounts for the delay caused by the respondent and render justice என தெரிவித்த நிலையில் மனுதாரர் **03.01.2023** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

**4)** தூத்துக்குடி மாநகராட்சியின் கணக்கு அலுவலர் மற்றும் பொது தகவல் அலுவலர் **03.01.2023** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

“ தூத்துக்குடி மாநகராட்சியில் மருத்துவ அலுவலராகப் பணியாற்றி வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற திருமதி. நளினி தாம்சன் என்பவருக்கு சேமநல நிதி அசல் தொகை வழங்கப்பட்ட நிலையில், அவருக்கு சேர வேண்டிய சேமநலநிதி வட்டித்தொகை இன்னும் வழங்கப்படவில்லை. தற்போது அவருக்கு சேரவேண்டி வட்டி கணக்கீட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிதியாண்டு முடிவதற்குள் அதாவது **31.03.2023**க்குள் அவருக்கு சேரவேண்டிய சேமநல நிதி வட்டித்தொகை வழங்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் இந்நேர்வு தொடர்பாக எனது **03.01.2023** நாளிட்ட அறிக்கையினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்” எனவும் தெரிவித்துள்ளார்.

**5)** தூத்துக்குடி மாநகராட்சி கணக்கு அலுவலர் மற்றும் பொது தகவல் அலுவலரின் **03.01.2023** நாளிட்ட அறிக்கை பின்வருமாறு :

“ மனுதாரர் தனது ஓய்வூதியத்தில் ஒரு பகுதி PFக்காக பிடித்தம் செய்யப்பட்டது என்றும் PF அசல் தொகை கிடைத்துவிட்டது எனவும் ஆனால் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட PF தொகைக்கு தனக்கு வட்டி வழங்கப்படவில்லை என்றும் உயர்நீதிமன்றம் பிடித்தம் செய்யப்பட்ட PF தொகைக்கு வட்டி கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் பல ஓய்வூதியதாரர்களுக்கு வட்டி

வழங்கப்பட்டுவிட்டதை அறிந்துள்ளதாகவும், எனவே தன் கணக்கில் பிடித்தம் செய்யப்பட்ட PF தொகைகளுக்கு உரிய வட்டி கணக்கிட்டு வழங்கும்படி கோரியுள்ளார். தகவல் அறியும் சட்டம் மனுவின் வாயிலாக சேமநலநிதி வட்டித்தொகை கோரப்பட்டது. ஓய்வூதியதாரர்களின் விண்ணப்பங்களுடன் மனுதாரர் விண்ணப்பமும் இணைக்கப்பட்டு வட்டி கணக்கீடு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்பெற்றது. மேலும் சேமநலநிதி தொடர்பான வட்டிக்கோப்பில் மூன்றாம் நபர் தொடர்புடைய தகவலும் அடங்கியுள்ளதால் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 விதியின் கீழ் கோப்பின் நகலை வழங்க இயலாது எனவும், மனுதாரர் கூறியுள்ள உயர்நீதிமன்ற வழக்கு எண் மற்றும் உத்தரவு தொடர்பான விபரம் குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் தகவலாக வழங்க இயலும் என மனுதாரருக்கு 05.05.2021–ம் நாளில் வழங்கப்பட்ட பதிலறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சேமநலநிதி வைப்புத்தொகை மீதான வட்டித்தொகை வழங்க கோரி, தூத்துக்குடி மாநகராட்சி ஓய்வூதியர்கள் சங்கம் மூலம் 56 ஓய்வூதியர்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டதையடுத்து ஓய்வூதியதாரர்களுக்கு 1984–85 முதல் 2013–2014 வரையிலான காலங்களுக்குரிய வட்டித்தொகை கணக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் இம்மாநகராட்சியில் பணிபுரிந்து இறந்த/ஓய்வுபெற்ற பணியாளர்களிடமிருந்து இதுவரை 150க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து மனுதாரருக்கும் சேமநலநிதி வட்டித்தொகை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது வட்டித்தொகை வழங்க நடவடிக்கையில் உள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

6) மனுதாரரது புகார் மனு, அவரது 23.12.2022 நாளிட்ட அறிக்கை, மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி கணக்கு அலுவலர் மற்றும் பொது தகவல் அலுவலர் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் தனது ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதிக்கு வட்டித்தொகை நாளது தேதிவரை வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சிப் பணியாளர்களது சேமநலநிதிக்கு 2013–2014 வரையிலான ஆண்டுகளுக்குரிய வட்டித்தொகை உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்ககம் அனுமதித்துள்ளது. மேலும், மனுதாரர் டாக்டர் திருமதி. நளினி தாம்சன் சேமநலநிதி வட்டித்தொகையும் அவ்வலுவலகத்தால் 2011ஆம் ஆண்டிலேயே அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தூத்துக்குடி மாநகராட்சி தொடர் நடவடிக்கை ஏதும் எடுக்காமல் இருந்துள்ளது தெளிவாகிறது. ஓய்வூதியர்களின் நலனை கருத்தில் கொள்ளாத இச்செயல் மாநகராட்சி அலுவலர்களின் அலட்சிய போக்கை காட்டுவதாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

இந்நேர்வில் காலதாமத நடவடிக்கைகளுக்கும் உரிய முறைகளை பின்பற்றாமைக்கும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் இந்நிகழ்வுக்கு காரணமாக இருந்துள்ள சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களின் ஊதியத்திலிருந்து காலதாமத வட்டித்தொகையினை வசூலிக்கவும், மனுதாரர் டாக்டர் திருமதி. நளினி தாம்சன் அவர்களுக்கு சேர வேண்டிய சேமநலநிதி வட்டித்தொகையினை 31.03.2023க்குள் வழங்கிடவும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும், இந்நேர்வு தொடர்பாக தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் இம்முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கை ஏதும் சமர்ப்பிக்கவில்லை. மாறாக கணக்கு அலுவலரே தனது கையொப்பமிட்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். இது மிகவும் கண்டிக்கத்தக்கது. இனி வரும்

காலங்களில் இதுபோன்று நிகழாவண்ணம் இருக்க அனைத்து மாநகராட்சி ஆணையர்களுக்கு அறிவுறுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

The attitude of the Corporation of Thoothukudi is censured seriously by this Forum for the following reasons:

1. The petitioner is a 75 years old senior citizen who had served in the Thoothukudi Corporation for 27 years. The interest amount due to the petitioner for her P.F. deductions has not been paid still even after a delay of 19 months since the date of her application dated 17.10.2020. The A.D., Local Fund Audit has confirmed that the petitioner is entitled to the interest amount even from 2011. A letter has .been also sent to the Thoothukudi Corporation by the LF Audit. Inspite of this, the delay, slackness, lethargy and indifference of the Corporation Officers have forced the petitioner to approach this Forum for settlement of her long pending dues from the Corporation. The communications from Local Fund Audit office have not been acted upon in a manner that deserve follow up in a case of a retired Medical Officer who is 75 years old.

2. The Corporation officials have been sleeping over this for nearly 2 years with no humanistic and sympathetic consideration towards a retired Medical Officer. The Commissioner, Corporation of Thoothukudi has done hardly anything in the matter. Had it been pro-active the delay in the settlement could not become a matter of complaint.

3. The Commissioner has not even sent a report during the hearing that shows the apathy and utter callousness in approach to such issues. An Accountant level officer attended the hearing and submitted a report.

4. The Forum places on record its deep displeasure over the conduct of the Corporation in the matter and orders that additional interest according to Government norms should be recovered from the Corporation officials responsible for this delay of 2 years and paid to the petitioner.

The DMA is instructed to ensure compliance with the directions of this Forum in this regard and call for the explanation of the Commissioner, Thoothukudi Corporation for such a messy, indifferent, cavalier and casual approach in a subject of this kind that deals with disbursement of interest dues to a retired Medical Officer and senior citizen. This state of affairs in this matter shows leadership failure of the Commissioner, Thoothukudi Corporation. The whole process of disbursement of interest dues and the additional interest imposed by the Forum payable to the petitioner for her mental agony, hardship and needless correspondence should be completed by 28.02.2023.

Disciplinary action should be initiated against all Corporation officials concerned in this tragic episode of atrocious delay under the supervision of the DMA.

2023–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)டாக்டர்.திருமதி.நளினி தாம்சன்,
எண். 181, V.E, ரோடு,
தூத்துக்குடி – 628 003.

2) ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

4)இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

20/1/23

செயலாளருக்காக

23.1.2023